முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திட்டக்குடி.

**OS.31/2014 PW:1 09.06.2023**

2023 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் **09** ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய சத்யா என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி .T.நித்யகலா, B.Com., B.L., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்யா | வயது | 38 |
| த/க/. பெயர் | செல்வம் | தொழில் | வீட்டுவேலை |
| ஜாதி | | கிராமம் | ராமநத்தம் |
| வட்டம் | | மாவட்டம் | |

**குறுக்கு விசாரணை**

1. உங்கள் கணவர் செல்வம் என்றால் சரிதான் . செல்வம் அழகப்ப படையாச்சி மகன்தான் என்பதற்கு பிறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை . செல்வம் படித்த பள்ளியின் மாற்றுச் சான்றிதழில் அவர் அப்பா பெயர் அழகப்ப படையாச்சி என்று உள்ளதற்கு அதனை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை . செல்வம் தாயார் நாவம்மாளுக்கும் தந்தை அழகப்ப படையாச்சிக்கும் நடைபெற்ற திருமண பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. அழகப்ப படையாச்சி மனைவி பெயர் பெரியம்மாள் என்றால் சரிதான் . அழகப்ப படையாச்சியின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது . அழகப்ப படையாச்சியின் தந்தைக்கு அது பூர்வீக சொத்து என்பதற்கு அ பதிவேடு மற்றும் ஏதாவது ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை . செல்வம் தாயார் நாவம்மாளுக்கும் தந்தை அழகப்ப படையாச்சிக்கும் திருமணமானதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் கோயிலில் திருமணம் ஆனது. எந்த ஊரில் திருமணம் ஆனது என்றால் தெரியாது . எந்த ஆண்டு திருமணம் ஆனது என்றால் தெரியாது. 1956 க்கு முன்பா , பின்பா என்றால் தெரியாது.

2. நீங்கள் தாக்கல் செய்துள்ள வாதசாஆ .1, 2 ல் புல எண்ணோ மற்றும் விஸ்திரணமோகுறிப்பிடவில்லை என்றால் சரிதான் . வாதசாஆ 1, 2 கூட்டுப்பட்டாவாக உள்ள நிலையில் யார் யாருக்கு எவ்வளவு என்பது தெரியுமா என்றால் தெரியாது . வாதசாஆ 1, 2 ஐ எதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சொத்துக்காக தாக்கல் செய்துள்ளேன்.

3. வாதசாஆ 3 ல் உங்கள் கணவர் பெயரோ அழகப்ப படையாச்சி பெயரோ , அழகப்ப படையாச்சியின் மற்ற வாரிசுகள் பெயரோ இல்லை என்றால் சரிதான் . வாதசாஆ 3 ல் உள்ள நபர்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான் . வழக்கு 4 வது இனத்திற்கான வாதசாஆ 4 ல் செல்வம் பெயர் இல்லை என்றாலும் மற்ற வாரிசுகளான சேகர்,அஞ்சுகம், சாந்தி பெயர்கள் உள்ளது என்றாலும் சரிதான் . வாதசாஆ 6 ல் உள்ள பட்டியல்

ராமநத்தம் கிராமத்தினுடைய முழு வாக்காளர் பட்டியல் இல்லை என்றால் சரிதான் . எந்த ஆண்டிற்கான வாக்காளர் பட்டியல் அசல் இல்லை என்றால் சரிதான்.

4. செல்வத்தின் தாயார் பெயர் நாவம்மாள் என்றால் சரிதான் . வாதசாஆ 7 உங்கள் திருமண பத்திரிக்கையில் பெரியம்மாள் என்றுதான் உள்ளது என்றால் சரிதான் , அதில் அழகப்பன் என்றுதான் அவர் தந்தை பெயர் உள்ளது . தாயார் நாவம்மாள் ஆக இருந்தாலும் வளர்த்தது அழகப்பன்தான் என்றால் சரிதான் , அழகப்பன்தான் அவரது தந்தை . நாவம்மாளின் கணவர் அழகப்பன்தான். வாதசாஆ 8 ஆன உங்கள் வீட்டாரின் நிச்சயதார்த்த பத்திரிக்கையில் செல்வத்தின் தாயார் பெரியம்மாள் என்றுதான் உள்ளது.

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(Sd/Nithyakala)**
**Principal District Munsif,**
Tittagudi.